பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை [25-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 325

# உணவு பொருள் விநியோகம்; சீர் செய்ய விசேட ஏற்பாடு!

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 25

பலாலி இராணுவத்தினர் நேற்றுப் பகல் ஒரு மணியளவில் கட்டுவன் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதேசமயம்; நேற்று முன்தினம் இரவு திவசப் பகுதியில் இருந்து அராலிப் பகுதியை நோக்கியும், வலந்தலைச் சந்தியிலிருந்து பொன்னாலைப் பகுதியை நோக்கியும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

(ஓ-3-15)

## அத்தியாவசிய பொருள்கள் தனியார் விற்கத் தடை!

யாழ்ப்பாணம், அக்டோபர் 25

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அடுத்து, அத்தியாவசிய உணவுப் பொருள்களின் சீரான விநியோகத்தை உறுதி செய்யவும், பதுக்கல் மற்றும் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை சகல மக்களுக்கும் நியாய விலையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிடைப்பதை உறுதி செய்ய யாழ். செயலகம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதற்கு வசதியாக, தனியார் வர்த்தக நிலையங்கள் அத்தியாவசிய உணவு பொருள்களை விற்பனை செய்வதை நிறுத்தும்படி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக மக்கள் முன்னணி, வர்த்தகர்களுக்கு நேற்று விடுத்த பொது அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்றைய நெருக்கடியான நிலையில் சாதாரண பொது மக்களுக்கு நாளாந்தம் வேண்டிய உணவுப் பொருள்கள் அவர்களுக்குச் சீராகக் கிடைப்பதை உறுதி செய்ய

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பங்கீட்டு உணவுப் பொருள்கள் விநியோகத்துக்கு புதிய திட்டம்

யாழ்ப்பாணம், அக். 25

பொதுமக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் உணவுப் பொருள்களை விநியோகிப்பது தொடர்பாக புதிய திட்டம் ஒன்று நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 'அ', 'உ' உலர் உணவு அட்டைகள் வைத்திருப்போருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நியாய விலையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

பங்கீட்டு அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்படவிருக்கும் உணவின் அளவு பற்றிய விவரம் 8 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்தப் புதிய திட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலமாகவும், வர்த்தக நிலையங்கள் மூலமாகவும் இந்த விநியோகம்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பதுக்கல் நடவடிக்கையை தடுக்க பாவனையாளர் பாதுகாப்பு குழு

யாழ்ப்பாணம், அக். 25

நெருக்கடியான காலகட்டத்தில் அத்தியாவசிய உணவு பொருள்களுக்கு ஏற்படும் திடீர் விலை உயர்வு மற்றும் பதுக்கல் போன்ற நடவடிக்கைகளை தடுக்கவும் சீரான உணவு பொருள் பொருள் விநியோகத்தைப் பேணவும் "பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள்" அமைக்கப்படவுள்ளன.

யாழ் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்திலும் கிராம சேவை அலுவலர் பிரிவு மட்டத்திலும் மேற்படி குழுக்கள் அமைக்கப்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள், நுகர்வோர் பிரதிநிதிகள், ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் மேற்படி குழுக்களில் அங்கம் வகிப்பர்.

யாழ் செயலகத்தில் நேற்று நடைபெற்ற அவசரகால கலந்துரையாடலில் மேற்கண்ட புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது.

உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள குழுக்களுக்கு உதவி அரசாங்க அதிபரும், கிராமசேவை அலுவலர் பிரிவு மட்டத்தில் உள்ள குழுவுக்கு கிராம சேவை அலுவலரும் தலைமை தாங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-5)

## 2 மடங்கு உணவு வடக்கே வரும்!

லண்டன், அக். 25

ஜனாதிபதி நேற்று முன்தினம் விடுத்த உத்தரவை அடுத்து குடாநாட்டுக்கு தற்போது அனுப்புவதைப்போல இரண்டு மடங்கு உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்க, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. இத்தகவலை வெளியிட்டது.

## அத்தியாவசிய பொருள்கள் பிரகடனம்

யாழ்ப்பாணம், அக். 25

பின்வரும் பொருள்கள் அத்தியாவசியப் பொருள்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன:-

- ★ அரிசி வகைகள் (எல்லா வகைகளும்)
- ★ கோதுமை மா
- ★ சீனி
- ★ தேயிலை
- ★ பால்மா வகைகள்
- ★ பருப்பு (சகல தானிய — பருப்பு வகைகளும்)
- ★ தேங்காய் எண்ணெய்
- ★ மண்ணெண்ணெய்

நெருக்கடியான சூழ்நிலையில் அத்தியாவசிய உணவுப்பொருள்களது விநியோகம், நுகர்வு, கையிருப்பு என்பவை தொடர்பாக யாழ். செயலகத்தில் நேற்று இடம் பெற்ற அவசர கலந்துரையாடலில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(உ-ஓ-5-3)

## களஞ்சியம் உடனடியாக திருத்தம்

யாழ்ப்பாணம், அக். 25

விமானத் தாக்குதலால் சேதமடைந்த பருத்தித்துறை உணவுக் களஞ்சியத்தின் திருத்த வேலைகளை உடன் ஆரம்பிக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

(உ-3)

## முச்சந்தி முரளி



பதுக்கல் பாப்பினம்...... விடாமப் பிடிக்க வேணும் என்டியளோ.......!

## விளக்க கூட்டங்கள்

யாழ்ப்பாணம், அக். 25

அத்தியாவசியப் பொருள்கள் சம்பந்தமாக தனியார் வர்த்தகர்கள், போக்குவரத்துச் சாதன உரிமையாளர்கள், நெல் ஆலை உரிமையாளர்கள் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்குவதற்காக,

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவம் தாக்கி தமிழர் காயம்

யாழ்ப்பாணம், அக். 25

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி, பூமாச்சோலையில் நேற்றுக்காலை 7 மணியளவில் இராணுவத்தினர் தமிழ் மகன் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்தினர்.

காயங்குடாவைச் சேர்ந்த [illegible] (20 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

[ஓ-3]

## 'குமாரி' கப்பலிலிருந்து உணவுப் பொருள்களை இறக்கும் வேலை துரிதம்!

பருத்தித்துறை இறங்கு துறைக்கு நேற்று நண்பகல் 12 மணியளவில் வந்து சேர்ந்த 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனே ஆரம்பமாகின.

பொருள்களை இறக்கி முடிந்ததும் நாளை இந்தக் கப்பல் கொழும்புக்கு திரும்ப இருப்பதாகவும்—

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை உணவுப் பொருள்களுடன் மற்றொரு கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் எதிர் பார்க்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)

## நேற்று மாலை நகரில் மக்களை வதைத்த வதந்தி!

யாழ்ப்பாணம், அக். 25

நேற்று மாலை 5.30 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் அரியாலை, மணியம் தோட்டம் மற்றும் அயல் கிராம மக்களை வதந்தி பெரும் வதை செய்தது!

யாரோ கிளப்பிவிட்ட புரளியை நம்பி, கொட்டும் மழையில் நனைந்த வண்ணம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதி வீதியாக ஓடித்திரிந்தனர்;

[8 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்புப் பகுதியில் 3 ஊர்காவலர்கள் பலி!

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி—போரதீவு பகுதியில் நேற்றுப் பகல் 11-45 மணியளவில் ஸ்ரீலங்கா ஊர்காவல் படையினர்மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தச் சம்பவத்தில் மூன்று ஊர்காவலர்கள் பலியானார்கள். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

டிராக்டர் ஒன்றில் சென்று கொண்டிருந்த ஊர்காவலர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் டிராக்டரும் முற்றாகச் சேதமானது.

அவர்களிடம் இருந்து இரு வேட்டைத் துப்பாக்கிகளையும், எம். டி. தோட்டாக்களையும் புலிகள் கைப்பற்றினர்.

(ஓ-3)

## நாடாளுமன்றத்தில் நேற்றும் கூச்சல், குழப்பம்!

நாடாளுமன்றத்தில் நேற்றும் இரண்டாவது நாளாக எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குழப்பத்தை ஏற்படுத்தினர்.

காலையில் சபை கூடிய போது எதிரணி எம். பிக்கள் பலரும் மூகம்மதுவை சபாநாயகராகத் தம்மால் ஏற்க முடியாது என்று கூச்சல் எழுப்பி குழப்பம் விளைவித்தனர்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகர் சபையை ஒத்தி வைத்தார்.

பிற்பகலில் சபை கூடிய போது அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் ஆரம்பிக்கப்பட்டது.

பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கும் சபாநாயகர் மூகம்மதுவே தலைமை வகித்தார். விவாதம் தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

[அ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணப்பெண் தேவை

யாழ். இந்து, செவ்வாய் குற்றமுள்ள [13 பாவம்] கொழும்பில் வேலை செய்யும் 30 வயது B Sc சிவில் எஞ்ஜினியருக்கு மணப்பெண் தேவை மங்களா ஏஜென்சி, சொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [18540]

### ஜோதிடம்

திருமணத்தடை, தொழில் நட்டம், கல்வி, குழப்பம், பருவத்தில் விவாகம் நடவாமை போன்றவைகள் நீங்கி அதிஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். சாந்தி பரிகாரங்களுடன் யந்திரங்களும் வழங்குகிறோம் ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி [146, பருத்தித்துறை வீதி] நல்லூர். [18518]

### இடமாற்றம்

புங்குடுதீவில் இயங்கிவந்த ''இமையாணம் வைத்திய சாலை'' சகல வசதிகளுடன் இல. 129, ஸ்ரேசன் றோட் (புகையிரத நிலையம் முன்பாக) யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து சேவையாற்றுகிறது. தீவகத்தில வழங்கப்பட்ட சிறந்த வைத்திய சேவை தொடர்ந்து வழங்கப்படும். (18531)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், இருபாலைச் சந்தியில் பாதுகாப்பான இடத்தில் கடை வாடகைக்கு உண்டு. வியாபார முதலீடு செய்து வியாபாரம் செய்ய ஆற்றல் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். இல 821, C/o உதயன். [4361]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைசுாலவியல், சூதகக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணை வைத்தியர், சி இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [4325]

## மாகாண சபைகளுக்கு 50 கோடி ஒதுக்கீடு

கொழும்பு, அக. 25 கல்வி உயர் கல்வி அமைச்சினால் மாகாண சபைகளுக்கு 50 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி அவசர கல்வி முதலீட்டுக்கு உபயோகப் படுத்தப்படும். (த)

# பிறந்த நாள் வாழ்த்து

## ★ செல்வன் க. தசாகன் ★

திரு. திருமதி கணபதி அருள்செல்வி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தசாகன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (25-10-1991) வெள்ளிக்கிழமை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணைமார், மாமாமார், அக்கா, நண்பர்கள் பல செல்வங்களும் பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (18537)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 | 25 |
| — | — |
| 02 | 09 |
| — | — |
| 1935 | 1991 |

### அமரர் வல்லிபுரம் நடராசா

(ஓய்வுபெற்ற தபால் தரம்பிரிக்கும் உத்தியோகத்தர், M. S. O.)

எங்கள் அன்புத் தெய்வமே! எம்மையெல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழவைத்த தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற என்றும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளை, உற்றார், உறவினர்கள்.

ஐயனார் கோவில் லேன்,
சுன்னாகம். (18144)

# செட்டிகுளத்தில் மேலதிக இராணுவம் குவிப்பு?

கொழும்பு அக் 25 வவுனியா-மன்னார் பாதையில் செட்டிகுளத்தில் மேலதிக இராணுவம் குவிக்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கு குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் முக்கிய நோக்கம் மன்னாரை நோக்கி நகருவதே என்றும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-த]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 | 24 |
| — | — |
| 09 | 09 |
| — | — |
| 1969 | 1991 |

செல்வி

### இராஜேஸ்வரி தம்பிராசா

[NCAT (ஆங்கிலம்) 1 ஆம் வருட மாணவி, தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்]

பாசத்தின் ஒளியாய், பண்பின் இருப்பிடமாய் ஒளிர்ந்த எம் அன்புத் தோழியே! வேளை வரும் முன்னே எமை விட்டு பிரிந்துவிட்டாய் உன் பசுமையான நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில் அலைமோதும்.

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

உனை மறவாத!
NCAT (ஆங்கிலம்) 1ஆம் வருட
மாணவர்கள்.

தொழிநுட்பக் கல்லூரி
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (18544)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஈழ மண்ணில்!
25-11-1958

தமிழ் ஈழ மண்ணுக்காக!
25-10-1985

### லெப். ஜீவன்
### (த. இரத்தினசாமி)

வெற்றியூராம் வெற்றிலைக்கேணி மண்ணில்
வீரநடை போடும் வீர வேங்கைகள் தன்னில்
முன்னர் முதல் உதித்த மூத்தவனும் நீயேயடா!
தக்கதோர் தருணத்தில் தமிழ் ஈழம் மீட்டிடவே
உற்றாரும், பெற்றாரும் மனமுவந்து வழியனுப்ப
மற்றோரும், மற்றோரும் நோக்காது வழி நடந்தவனும்
நீயேயடா!
அண்ணன் வழிநடக்கத் தக்கதோர் துணை தேடி
உற்றதோர் தோழர்களை தமிழ் ஈழ மண்ணுக்காக
வன்னி நெடுங்காட்டில் கொமாண்டோ பயிற்சிதனை
கொடுத்தவனும் நீயேயடா!
தங்கத்தமிழ் தலைவன் இன்முகம் காண நெடுமாறன்
வந்தவேளை
கடிவழி நடந்து சென்று வருகையிலே
சிங்கள ஆதிக்க வெறியர்கையில் அகப்பட்டு என்ன
ஆனாயோடா!
என்ன வந்தாலும் எதிர்க்கத் துணிந்த நீ உன்
உன் தோழர்கள் வேறன்ஸ், சபா, வலிஜ், அதிகமடிய
ஜீவனே குதிரை வீரனே நீமட்டும் என்ன
ஆனாயோடா!

உனது முகம் காணாமல் துடிக்கும்,
பெரியக்கா குடும்பத்தினர்.

வெற்றிலைக்கேணி,
முள்ளியான். (4357)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது! விற்பனையாகின்றன!!
அரசாங்க எழுதுனர் சேவை
இராம அலுவலர் சேவை
போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி
★ மொழித்தேர்ச்சி ★ பொது உளச்சார்பு
★ பொது அறிவு
அஸ்ரன் வெளியீடு: விலை 115/-
[எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்]
[சி-0741]

## கோண்டாவில், இணுவில் தெங்கு - பனம்பொருள் உற்பத்தி விற்.கூ.சங்கம்.

# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி:** காசாளர் (ஆண்பாலர்களிடம் மட்டும்)

**சம்பளத்திட்டம்:** 306.8 - 10 உம் அமைய. 1045 - 40x4, 50 x 10 - 1705, இதர படிகளும்

**தகைமைகள்:-**

(அ) கூட்டுறவு பணியாளர் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் காசாளர் / விற்பனை நிலைய பதவியில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் [உயர்தரம்] / க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களும், அத்துடன் கூட்டுறவுச் சங்கத்தில் காசாளர் / விற்பனை நிலைய பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

**வயது:-** 21 — 40 க்கு உட்பட்டவர்கள்

**பிணை:-** 5,000/- காசுப் பிணையும், 50 000/- உறுதிப் பிணையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பதவி:-** தமிழ் தட்டெழுத்து லிகிதர்

**சம்பளத்திட்டம்:-** 304.8 - 10 க்கு அமைய 1005 - 40 x 5, 50x10 - 1705 இதர படிகளும்.

**தகைமைகள்:-**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்திற்கு அமைவாக தமிழ் தட்டெழுத்தாளர் பதவியில் 3 வருட அனுபவம் அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திற்கு அமைவான பதவியில் 6 வருட அனுபவம். அல்லது,

(இ) க. பொ. த. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தியும், அதில் தமிழ் / கணிதம் / தூய கணிதம் / தமிழ் தட்டெழுத்தில் பெற்றுள்ள திறமைச் சித்தியும்.

தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ் சுருக்கெழுத்து/ தட்டெழுத்து (சாதாரணதரத்தில்) சித்தி பெற்ற சான்றிதழ். அல்லது, அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் பெற்ற சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

**வயது:-** 21 — 40 க்கு உட்பட்டவர்கள்.

**பதவி:-** உற்பத்தி முகாமையாளர்

**சம்பளத்திட்டம்:-** 306.7 - 9 க்கு அமைய, 1105 - 60x4, 4x75 - 2170 இதர படிகளும்,

**தகைமைகள்:-**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 8 ஆவது சம்பளத்திட்டத்திலுள்ள பதவியில் 3வருடத்திற்கு குறையாத அனுபவமும், அல்லது.

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பளத் திட்டத்திலுள்ள பதவியில் 6 வருடத்திற்கு குறையாத அனுபவமும், அல்லது.

(இ) க.பொ.த உயர்தரம் இரசாயனவியலில் திறமைச்சித்தி உட்பட 3 பாடங்களில் சித்தியும், உள்ளூர் மூலவள உற்பத்தி தொழிலில் 2வருடத்திற்கு குறையாத அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்;

பனை, தென்னை மூலவள உற்பத்தித்துறையில் பெற்றுள்ள அனுபவம்,மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**வயது:-** 21 — 40 க்கு உட்பட்டவர்கள்;

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், கோண் - இணுவில், தெங்கு, பனம் பொருள், உற்பத்தி, விற்பனவுக, கூட்டுறவுச் சங்கம், காவடிச் சந்தி, கே. கே. எஸ் வீதி, கோண்டாவில் என்ற முகவரிக்கு 7-11-1991 ஆம் திகதிக்குப் பிந்தாமல் நேரிலேயோ அல்லது, பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும்,

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
பொது முகாமையாளர்.

தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்,
கோண்டாவில். (இ-0743)

# உணவுப் பங்கீடு-புதிய திட்டம்

| பொருள் விவரம் | ஓர் அங்கத்தவர் எடை | ரூ-ச | இரு அங்கத்தவர் எடை | ரூ-ச | 3 அங்கத்தவர் எடை | ரூ-ச | 4 அங்கத்தவர் எடை | ரூ-ச | 5 அங்கத்தவர் எடை | ரூ-ச |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி | 2 கிலோ | 27-60 | 4 கிலோ | 55-20 | 6 கிலோ | 82-80 | 7 கிலோ | 96 60 | 10 கிலோ | 138 00 |
| மா | 2 கிலோ | 24-50 | 4 கிலோ | 49-00 | 4 கிலோ | 44-00 | 5 கிலோ | 61-25 | 8 கிலோ | 98 00 |
| சீனி | 250 கிராம் | 6-23 | 500 கிராம் | 12-45 | 500 கிராம் | 12-45 | 500 கிராம் | 12-45 | 500 கிராம் | 12-45 |
| பருப்பு | 250 கிராம் | 11-75 | 250 கிராம் | 11-75 | 250 கிராம் | 11-75 | 500 கிராம் | 23-50 | 500 கிராம் | 23-50 |
| தேயிலை | — | | 100 கிராம் | 8-50 | 100 கிராம் | 8-50 | 100 கிராம் | 8-50 | 100 கிராம் | 8-50 |
| பால்மா | — | | — | | 1 பக்கட் | 38-00 | 1 பக்கட் | 38-00 | 1 பக்கட் | 38-00 |
| மொத்தம் | | 70-08 | | 136-90 | | 202-50 | | 260-10 | | 318-45 |

# உதயன்

## அகதி முகாம்களில் நோய் அபாயம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அகதி முகாம்களில் வயிற்றோட்ட நோய் பரவும் ஆபத்துத் தோன்றியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. புதனன்று மட்டும், இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதப்படும் பத்துக்கு மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள், யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது மிகவும் அக்கறையுடன் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம். வயிற்றோட்டம் பரவி, மக்கள் அழிவை ஏற்படுத்தக் கூடிய (Epidemic) வாந்திபேதியாக மாறக்கூடிய ஆபத்து உண்டு. ஆகையால் அத்தகைய நிலை உருவாகு முன்னர், வயிற்றோட்டத்தை ஆரம்பக் கட்டத்திலேயே கட்டுப்படுத்துவது அவசியம்.

மழை காலங்களில் வயிற்றோட்டம் இலகுவில் பரவுவது உண்டு. அதே போல, மக்கள் நெருக்கமாகவும், சுகாதார வசதியின்றியும் வாழும் அகதி முகாம்களிலும் அந்நோய் விரைவில் பரவும். குடாநாட்டின் சில பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மழை காலத்தில் அகதி முகாம்களில் வாழ நேர்ந்தது பெரும் துரதிர்ஷ்டமானதாகும். இத்தகைய ஒரு பாதகமான நிலையை அரசாங்கம் வேண்டுமென்றே தோற்றுவித்துள்ளது.

யுத்தம் தொடங்கிய கடந்த பதினேழு மாதங்களாக, தமிழ்ப் பகுதி அரசினர் ஆஸ்பத்திரிகள் தொடக்கம் தனியார் மருந்துச்சாலைகள் வரை, போதிய மருந்துவகைகள் இல்லாமல் நோயாளர்கள் கஷ்டப்படுகிறார்கள்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தொற்று நோய்கள், இப்போதைய மாரி காலத்தில் பரவ ஆரம்பித்தால் கட்டுப்படுத்துவது என்பது இலகுவான காரியமாக இருக்காது. எனினும் எந்தக் காரணத்தைக் கூறியும் தொற்று நோய்கள் பரவுவதை அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு அனுமதித்தால், தமிழர்களைப் பெரும் எண்ணிக்கையில் அழித்தொழிக்க வேண்டும் என்ற சிங்களப் பேரினவாதிகளின் விருப்பம் நிறைவேற உடந்தையாக இருந்ததாக முடியும்.

ஆகையால் அகதி முகாம்களைப் பராமரிக்கும் தொண்டர் நிறுவனங்களும், மக்கள் சுகாதாரம், சுகநலம் பேணும் உள்ளூர் அரச அமைப்புகளும் தொற்று நோய் தடுப்பில் இணைந்து செயற்பட வேண்டும். போதிய மருந்து வகைகளைப் பெறுவதற்கு அரசாங்கத்தின் உதவியை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருந்து, "நாம் என்ன செய்வது?" என்று கையை விரிக்காமல், மக்கள் நலன் நாடி ஆக்கபூர்வமாகச் செயற்படுவது அவசியம்.

தொற்று நோய் தடுப்பு — சிகிச்சை — மருந்துகளைப் பெறுவதற்கு தொண்டர் நிறுவனங்கள் தமது தலைமை அலுவலகங்களின் உதவியை நாடலாம். இத்தருணத்தில் போதிய மருந்து வகைகள் கிடைப்பதற்கு செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு பெரிதும் உதவலாம்; உதவவேண்டும்; உதவும் என நம்புகிறோம்.

தொற்று நோய் தடுப்பு மருந்துகள் கிடைப்பதில் கஷ்டம் இருந்தால் ஆயுள்வேத வைத்தியர்களிடம் ஆலோசனை பெற்று உள்ளூரில் கிடைக்கக்கூடிய சுதேச மருந்து வகைகளைப் பயன்படுத்தி நிலைமையை இப்போதே — உடனடியாகவே — கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாக வேண்டும்.

## கிளிநொச்சி நகரில் குண்டுவீச்சு!

கிளிநொச்சி, அக். 25

கிளிநொச்சி நகரப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5 30 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீசித் தாக்குதல்களை நடத்தின. அதில் வீடுகள் சில சேதமடைந்தன.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகில் உள்ள குடியிருப்புக்களை நோக்கி குண்டுகள் வீசப்பட்டன.

மக்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக்கொண்டதால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. (ஓ-76)

## கிளிநொச்சியிலும் பூநகரி அகதிகள்

கிளிநொச்சி அக். 25

பூநகரி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும் பல்வேறு பகுதிகளில் அகதிகளாக தங்கியுள்ளனர்.

கௌதாரிமுனை, ஆலடி, வாடியடி, நல்லூர், ஆலங்கேணி, ஞானிமடம் போன்ற கிராமங்களில் இருந்து வெளியேறிய மக்கள் உருத்திரபுரம், திருவையாறு, ஸ்கந்தபுரம், அக்கராயன், வன்னேரிக்குளம் போன்ற பகுதிகளில் அகதிகளாகத் தங்கி உள்ளார்கள். (ஓ-76)

## ஆனையிறவுப் பாதை ஊடாக போக்குவரத்து நடக்கின்றதாம்!

கொழும்பு, அக். 25

"ஆனையிறவுப் பாதை தற்போது திறந்து விடப்பட்டுள்ளது. தீவிர சோதனைக்குப் பின் இவ்வழியாக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படுகிறது."

இப்படிக் கூறினார் இராணுவப் பேச்சாளர் கேணல் முனசிங்க. நேற்று வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

"யாழ். நகரைப் பிடிப்பதா இல்லையா என்பது கேள்வியல்ல. இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதே இராணுவத்தின் நோக்கம். இந்த நோக்கத்தை எமது இராணுவம் மிகவும் நெருங்கிவிட்டது" என்றும் அவர் சொன்னார்.

வலம்புரி இராணுவ நடவடிக்கையின் இரு கட்டங்கள் முடிவடைந்து விட்டதாகவும் அவர் கூறினார். [உ-எ]

## லொறி கிளீனர் விபத்தில் பலி

தென்மராட்சி, அக். 25

வடபகுதியில் இருந்து கொழும்புக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வரச் சென்ற லொறி அங்கு விபத்துக்குள்ளானதில் அதன் கிளீனர் அந்த இடத்திலேயே பலியானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் யாழ் கண்ணபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லையா மகேந்திரன் [25 வயது] என்பவரே மரணமானவர் ஆவார். [ஓ-117]

## பாடசாலைகள் நேற்று திறப்பு

யாழ்ப்பாணம், அக். 25

யாழ். குடாநாட்டில் நேற்று பாடசாலைகள் திறக்கப்பட்டன. ஆனால் மாணவர்களின் வரவு மிகமிகக் குறைவாக இருந்தது.

அகதிகள் பாடசாலைகளில் அகதிகள் தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. [ஓ-51]

## கண்டித்த தம்பியை கடித்த அண்ணன்!

### பின்னர் தற்கொலை செய்ய முயன்றார்

தென்மராட்சி, அக் 25

அண்ணனைத் தம்பி கண்டித்தார். அதற்காகத் தம்பியைக் கடித்தார் அண்ணன்! பின்னர், தனது தவறை உணர்ந்ததும் அண்ணன் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்!!

இப்போது அண்ணனும், தம்பியும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

மட்டக்களப்பில் இருந்து இடம்பெயர்ந்து வந்து கச்சாய் வீதியில் வசிக்கும் 35 வயது அண்ணனும், 28 வயது தம்பியுமே இவ்வாறு கண்டித்தும், கடித்தும், தற்கொலை முயற்சியில் ஈடுபட்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அண்ணன் மதுபோதையில் வந்ததைத் தம்பி கண்டித்ததே இந்தக் "கதை"யின் ஆரம்பம். போதை தெளிந்ததும், தம்பியைத் தான் கடித்தது ஆகிய தவறை — குற்ற உணர்வை — [illegible] புரிந்து [illegible] அதன் திருப்பமாகும். [illegible]

## அதிபர்கள் ஆசிரியர்கள் கூட்டம்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கூட்டங்கள் கொத்தணி ரீதியில் இன்றும், எதிர்வரும் திங்கட்கிழமையும் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவிருப்பதாக கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்காக—

சுழிபுரம், காரைநகர், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, இளவாலை கொத்தணிகளில் கடமை புரிபவர்களை இன்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திலும்—

தெல்லிப்பழை, அம்பனை, அளவெட்டி — மல்லாகம், காங்கேசன்துறை கொத்தணிகளில் கடமை புரிபவர்களை எதிர்வரும் திங்கட்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மண்டபத்திலும்— கூடுமாறு கோரப்பட்டுள்ளது.

## உணவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும், கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்களை ஒழுங்கான முறையில் விநியோகிப்பதற்கு வசதியாகவும் பின்வரும் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்கும்படி வேண்டுகிறோம்.

இன்றிலிருந்து அத்தியாவசியப் பொருள்களான சீனி, மா, பருப்பு, தேயிலை, பால்மா, மண்எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை தனியார் விற்பனை நிலையங்கள், மொத்த விற்பனை நிலையங்கள், விற்பதை நிறுத்தும்படி வேண்டுகிறோம்.

ஒவ்வொரு மொத்த விற்பனையாளர்களும் தங்களிடமிருக்கும் பொருள்களின் அளவு, இருக்குமிடம் ஆகிய விபரங்களை அவ்வப்பகுதியில் இருக்கும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தற்போது இதற்கென இயங்கிக் கொண்டிருக்கும் குழுவிடம் வழங்குமாறு வேண்டுகிறோம்.

இன்றிலிருந்து மேற்கூறிய அத்தியாவசியப் பொருள்களை ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்வதையும் நிறுத்தவும்.

தேவையின் நிமித்தம் இப்பொருள்களைக் கொண்டு செல்ல வேண்டியிருப்பின் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இயங்கும் குழுவின் அனுமதிப் பத்திரம் பெற்றே கொண்டு செல்ல வேண்டும்.

இந்த விதிமுறைகளை தனியார் வர்த்தகர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்கள் அனைவரும் கடைப்பிடிக்குமாறு வேண்டுகிறோம்.

அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் பொதுமக்களின் உணவுத் தேவையை நிறைவேற்றுவது பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவும், உணவுப் பொருள்கள் ஒழுங்காக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யவுமே மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெலி கிரனேட் வீச்சு!

சாவகச்சேரி தனங்கிளப்புப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஹெலி திடீரென கிரனேட் வீச்சு நடத்தியது.

வீட்டில் உரையாடிக் கொண்டிருந்த இருவர் அப்போது காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சின்னத்தம்பி ஈஸ்வரி (வயது 20), குழந்தைவேலு தங்கவேலு (வயது 32) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ஓ-117)

## ஓய்வூதியம் வழங்கல் பற்றி கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்களுக்கு அக்டோபர் மாத ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக இன்று பிற்பகல் 2 மணிக்கு செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருக்கிறது.

வங்கி அதிகாரிகளையும், ஓய்வூதியர் சங்க சம்மேளன உறுப்பினர்களையும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் அழைத்துள்ளார்.

இந்த மாதத்துக்குரிய வவுச்சர்கள் கொழும்பில் இருந்து இன்னும் வந்துசேரவில்லை. வவுச்சர் இல்லாமல் ஓய்வூதியம் வழங்க முடியுமா என்பது குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் எனத் தெரியவருகிறது.

## நேற்று ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அலைந்தனர்: பாவம்! வயதானவர்களையும், குழந்தைகளையும் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. சிலர் மழையில் நனைந்ததால் நடுங்கிக் கொண்டிருந்தனர்.

மணியம் தோட்டம் கடற்கரையில் இராணுவம் வந்து இறங்கியதாகப் பரவிய வதந்தியைக் கேட்டே மக்கள் சாரி சாரியாக மூடை முடிச்சுகளுடன் மழையில் நனைந்தவாறு ஓட்டம் பிடித்தனர். ஒருவர் மாறி மற்றவர் மூலம் வதந்தி பரவியதே அன்றி உண்மை-பொய் அறிய எவரும் முயலவில்லை.

எனினும் பின்னர் இராணுவம் தரையிறங்கவில்லை என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மணியம் தோட்டம், பூம்புகார், அரியாலை, ஈச்சமோட்டை, கொழும்புத்துறை மக்கள் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பினர். [அ-8 131]

## பங்கீட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படவிருக்கிறது.

புதிய திட்டத்தின்படி, மக்களுக்கு உரிய பொருள்கள் கிடைப்பதற்கு வசதியாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ப.நோ.கூ. சங்க கிளைகளைத் திறந்து விற்பனைகளை மேற்கொள்ளும்படியும் யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை—

இடம்பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு விநியோகம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள அட்டவணைப்படி மேற்கொள்ளப்படும் என முடிவு செய்யப்பட்டது. [உ-3-5]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமாதான நோபல் பரிசுபெற்ற அவுங்சென் சுஜி தொடர்ந்து சிறையில்!

ரங்கூன், அக். 25

பர்மிய எதிர்க்கட்சித் தலைவி அவுங் சென் சுஜி, தமக்கு வழங்கப்பட்டுள்ள சமாதான நோபல் பரிசை ஒஸ்லோவில் நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்குச் சென்று பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

பரிசளிப்பு நிகழ்ச்சிக்குச் செல்வதற்கு வசதியாக, அவரை விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை பர்மிய இராணுவ அரசு நிராகரித்துவிட்டது.

இது தொடர்பாக தாம் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டதாக பர்மாவுக்கான நோர்வே தூதுவர் தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டு பர்மாவில் நடந்த பொதுத்தேர்தலில் அவுங்செள் சுஜியின் தேசிய ஜனநாயகக் கட்சி வெற்றியீட்டியது என்பதும்—

ஆனால் அவரிடம் ஆட்சியை ஒப்படைக்க மறுத்த இராணுவ அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளாக அவரைத் தடுத்து வைத்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். (உ-ஓ-10)

## பூநகரி அகதிகளுக்கு இலவச உலர் உணவு

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, கௌதாரிமுனை கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் மாவட்டத்துக்கு வந்துள்ள 450 குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு வழங்கப்படவிருக்கிறது.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இதுகுறித்து முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க யாழ். அரச அதிபர் சம்மதம் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவார். (உ-3-8)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி அருளம்பலம்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த நாகேஸ்வரி அருளம்பலம் காலமாகி விட்டார். இவர் அருளம்பலம் [இளைப்பாறிய தலைமை ஆசிரியர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னப்பு விதானையார் தம்பதிகளின் புதல்வியும், சிறீவிஜயதரன் [இலங்கை வங்கி], சிறீஜெயப்பிரகாசதரன் [பொறியியலாளர்], ரேணுகா ஆகியோரின் தாயாரும், திருமதி கமலாதேவி [விவசாயப்பாடசாலை திருநெல்வேலி], திருமதி யசோதா ஆகியோரின் அன்பு மாமியாரும், கோபி, வாணி, பிரதீப், சுஜி, கவி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கரும்பராய் மேற்கு மூத்தமகனுடைய "கமலவாசா" இல்லத்தில் இருந்து இன்று [25-10-91] 11 மணிக்கு பூவோடை மயானத்துக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சிறீவிஜயதரன்
மானிப்பாய் வீதி,
உரும்பராய் மேற்கு. [18545]

### வி. ஞானேஸ்வரன்
[காந்தன்]

வி. ஞானேஸ்வரன் [காந்தன்] நேற்று [24-10-91] கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியினதும், பராசக்தியினதும் அருமை மகனும், ஞானாம்பிகை, ஞானசூரியன் [ஜேர்மனி], ஞானசம்பந்தன் [சுவிஸ்] ஞானசொரூபன், ஞானகுமார், ஞானேந்திரன், ஞானகலை, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், எஸ். ஆர். அன்னலிங்கம், எஸ். ஆர். மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், தவமணியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை [26-10-91] கொழும்பில் கனத்தை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. R. அன்னலிங்கம்
சிவகுரு லேன்,
கொக்குவில். (18149)

# வட - கிழக்கின் இந்நிலைக்கு காமினியே சூத்திரதாரி!

## ஜனாதிபதி பிரேமதாஸா குற்றச்சாட்டு

கொழும்பு, அக். 25

வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலையை உருவாக்கிய பிரதான நபர் காமினி திஸநாயக்காவே:

— ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச, முன்னாள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவுக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டி உள்ளார்.

1981 ஜூன் முதலாம் திகதி யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டது சம்பந்தமாக ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு காமினிதிஸநாயக்கா முன்னர் கடிதம் எழுதி இருந்தார்.

இக்கடிதத்துக்கு பதில் அளிக்கும் விதத்தில் ஜனாதிபதி நேற்று முன்தினம் கடிதம் எழுதி இருந்தார்.

ஜனாதிபதி தெரிவித்திருப்பதாவது:

பத்து வருடங்களுக்கு முன் யாழ். பொதுநூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் இந்த நாட்டின் சமுதாயங்களுக்கு இடையிலான உறவில் கறைபடிந்த மிகத் துயரமான சம்பவம் ஆகும்.

நாடாளுமன்றத்தில் மாவட்ட அபிவிருத்திச்சபை முறையைக் கொண்டு வந்து அதிகாரத்தைப் பரவலாக்க முயன்றபோது காமினி திஸநாயக்காவே அதனை எதிர்த்தார்.

1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாள் அவர் நிறைய ஆட்களைக் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றார். யாழ்ப்பாணம் சென்ற அவர் வாக்குப் பெட்டிகளைச் சேகரித்து கள்ள வாக்குகளைப் போட்டார்.

இதனை நான் கூறவில்லை. காமினி திஸநாயக்கா முன்னிலையில் வைத்து காலஞ்சென்ற அமிர்தலிங்கமே இதனை நாடாளுமன்றத்தில் முன்பு தெரிவித்திருந்தார். அமிர்தலிங்கம் அன்று ஆற்றிய உரை என்னிடம் இருக்கிறது.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் சதி, நாசவேலைகள் இடம் பெற்ற பின்னர் —

ஒரு சர்வதேச நூல் நிலையமான யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட பின்னர் —

வாக்குச் சீட்டுகளினால் நீதியைப் பெறமுடியாது என்று இளம் தமிழ் தீவிரவாதிகள் கருதினர். நீதியைப் பெறுவதற்கு தமது தலைவர்களினால் முடியாவிடில் நீதியை குண்டுகள் மூலம் பெறுவோம் என்று அவர்கள் நினைத்தனர். இப்படித்தான் அவர்கள் பயங்கரவாதச் செயல்களில் இறங்கினர்.

1981 மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின்போது திரு காமினி திஸநாயக்கா யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு தேர்தலில் ஈடுபட்டார் என்பது ரகசியம் அல்ல. வெளியில் இருந்து 300 பேர் யாழ்ப்பாணத்தில் தேர்தல் கடமை செய்ய அவரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். அப்போது வாக்குச் சீட்டுப் பெட்டிகள் காணாமற் போயின. இன்னும் அவை கண்டுபிடிக்கப்படவில்லை. இச்சம்பவங்கள் எல்லாம் காலம் தாழ்த்தியே வெளிவந்தன.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்தது பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். வடக்கு-கிழக்கில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு எமது ஆயுதப்படையினரும், பொலிஸாரும் நடத்திய வெற்றிகரமான தாக்குதல்களை நீங்கள் மறந்து விட்டீர்கள்.

தேசிய பாதுகாப்பு அமைச்சராக ஐந்து வருடகாலம் கடமையாற்றிய உமது சகாவான அத்துலத் முதலியால் சாதிக்க முடியாததை, கடந்த இரண்டரை வருடகால எனது நிர்வாகத்தில் சாதித்துள்ளேன்.

விடுதலைப் புலிகளையும், ஜே. வி. பியினரையும் அழிப்பதில் பெரும் வெற்றி கண்டுள்ளேன்.

— இப்படி ஜனாதிபதி பிரேமதாசா தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். [இ-த]

## விளக்க...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இன்று காலை குடாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டங்களில் பங்குபற்றும்படி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

கூட்டம் நடைபெறும் இடங்கள் வருமாறு:-

காலை 10 மணிக்கு

★ சண்டிலிப்பாய் — மானிப்பாய் வெஸ்லி படமாளிகை.

★ சங்கானை — வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

★ உடுவில — நாகம்ஸ் படமாளிகை.

★ நல்லூர் — திவ்விய ஜீவன சங்க மண்டபம்.

★ கோப்பாய் — நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

★ பளை — புலோப்பளை கல்வி வளர்ச்சிக் கழகம்.

★ பருத்தித்துறை — வட இந்து மகளிர் கல்லூரி.

★ கரவெட்டி — நெல்லியடி மகா வித்தியாலயம்.

11 மணிக்கு

★ யாழ்ப்பாணம் — யாழ். இந்துக் கல்லூரி.

★ தெல்லிப்பழை — அளவெட்டி மகாஜனாக் கல்லூரி.

12 மணிக்கு

★ சாவகச்சேரி — தெய்வேந்திரா படமாளிகை.

★ மருதங்கேணி — அம்பன் அரசினர் பாடசாலை.

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு: போட்டிப் பரீட்சை நடக்கும்

யாழ்ப்பாணம், அக். 25

விஞ்ஞான - கணித பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாண அரசாங்க சேவையின் கீழ், உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக இப் பயிலுநர் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

போட்டிப் பரீட்சையில் சித்தி அடைவோர் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

பயிற்சி முடிவிலும் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு அதன் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் ஆகக் குறைந்தது க. பொ. த. பத்திர (உயர்தர) பரீட்சையில் கணித, விஞ்ஞான பாடங்கள் மூன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

பரீட்சை விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் நவம்பர் பதினோராம் திகதியாகும்.

நியமனம், நிபந்தனைகள், பரீட்சை பற்றிய விவரங்களை உதயன் பணிமனையில் பார்வையிடலாம். (அ)

## முக்கியத்துவம் மிக்க வெற்றி என்கிறார் ராணுவத் தளபதி

கொழும்பு, அக். 25

யாழ். குடாநாடு இராணுவத்தின் சுற்றிவளைப்புக்கு உள்ளாகி, துண்டிக்கப்பட்டிருப்பது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி ஆகும்.

இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா மேற்கண்டவாறு இராணுவத்துக்குப் பாராட்டு வழங்கி உள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

யாழ் குடாநாட்டுடனான சகல கடல், தரை மார்க்கங்களும் தற்போது துண்டிக்கப்பட்டுவிட்டன.

யாழ். குடாநாட்டுக்குள் சிக்கியுள்ள புலிப் போராளிகள் இப்போது வெளியேற முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர். வெளியில் இருந்தும் அவர்கள் உள்ளே செல்ல முடியாது. பொது மக்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற முடியாது.

— இப்படி ஹமில்டன் வனசிங்கா மேலும் தெரிவித்தார் என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-த]


ஆத்மீக தாகம் தீர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

**எழுப்புதல் கூட்டங்கள்**

இடம் : பரி. பேதுரு ஆலயம் [நிமர் மண்டபம்]
காலம் : அக்- 25, 26
நேரம் : மாலை 4 00 மணி
செய்தி : வண. ஜே. விவேகனாதன்
[வடக்கு — கிழக்கு சபா சங்கத் தலைவர்]
[C/0851]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-10-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org